2002 ஏப்ரல் 29] [திரு. கோவை தங்கம்]

கொண்டிருக்கின்றார்கள். தான் பெற்ற குழந்தைகளுக்கு பால் வாங்கிக் கொடுப்பதற்குக்கூட வசதி கிடையாது. மருந்து வாங்கிக் கொடுப்பதற்குக்கூட வசதி கிடையாது. அங்கிருக்கின்றவர்களுக்கு வேறு தொழில் செய்வதற்கு வழி இல்லை. அதனால், அந்தத் தொழிலாளர்களுடைய நிலை என்ன என்பதை தயவுசெய்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு, உடனடியாக ஹைபாரஸ்ட்-ஐ அரசு ஏற்று நடத்துவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அமைச்சர் அவர்கள், மேலாண்மை இயக்குநரிடம் அறிக்கையை சீக்கிரம் வாங்கி நடவடிக்கை நீங்கள் எடுங்கள். அதுதானே சொல்லப் போகிறீர்கள். சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்: வருகிற 6ஆம் தேதி முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கை நிச்சயம் விரைவில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அறிக்கை அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. சி. சிவசாமி, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழு தனது ஆய்விற்கு எடுத்துக்கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் குறித்த குழுவின் எட்டாவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.